# 13 பின்னூட்டல் வழங்குதல்

**இலக்கு**

*மாணவர்கள் ஆக்கநிலையான விமர்சனங்களை எதிர்கொள்வதோடு அவற்றை கையாளப் பழகுகிறார்கள். அவர்கள் விமர்சனத்தை தெளிவாகவும் பயனுள்ளதாகவும் மற்றும் பரிவான முறையில் அமைக்கவும், அதனுடன் மற்றவர்களிடமிருந்து விமர்சனத்தை பெற்றுக்கொள்ளும்போது பொறுப்புள்ள முறையிலும் ஏற்றுக்கொள்ளவும் கற்கின்றனர்.*

தரம் 3 - 9

15 - 25 மணித்துளிகள்

**கருவிகள்:**
மாணவர்கள் முன்னர் எழுதிய சுருக்க எழுத்துருக்களை (அரை பக்கம்)கையில் வைத்திருப்பர் (மாற்றுகளுக்குக் கீழே பார்க்கவும்)

**குறிப்புகள:**

- இருவர் மற்றும் குழுக் கலந்துரையாடல்களில் பின்னூட்டலை ஆக்கநிலையில் அணுகுதல் நல்ல கலந்துரையாடற் பண்பாட்டின் திறவுப் பண்பாகும். மாணவர்களுக்கு நீடித்த பக்கத்துணை வழங்குதற்கு முறையான பயிற்சிகளை மாற்றுகளுடன் திரும்பத் திரும்பப் பழக்குதல் வேண்டும்.
- மாணவர்களுக்குப் பின்னூட்டல் விதிகளை முன்கூட்டியே வரையறுப்பது இன்றியமையாத செயலாகும். இரண்டு தொடக்கநிலை விதிகள் இங்கே தரப்பட்டுள்ளன:

  1. பின்னூட்டல்கள் நான் - என்று அமைக்கப்பட வேண்டும். (எடுத்துக்காட்டு, "நான்…என்று நம்புகிறேன்.", "நான் …விரும்புகிறேன் / விரும்பவில்லை).

  2. கருத்துகள் காரணங்களுடன் கூறப்பட வேண்டும். (எ.கா.: "உங்கள் எழுத்துருவை நான் விரும்புகிறேன், ஏனெனில்…", "நீங்கள் … என்பதால் நான் குழப்பமடைகிறேன்", "ஏனென்றால் நீங்கள்…")

---

**நடைமுறை:**

- மாணவர்கள் இருவராக பிரிக்கப்படுகின்றனர். ஒரு மாணவர் (அ) தன்னுடைய எழுத்துருவை மற்ற மாணவருக்கு (க) படித்துக்காட்டுகிறார்.
- மாணவர் (க) தன்னுடைய எண்ணங்களுக்கும் உணர்வுகளுக்கும் அணியமாய் நின்றுகொண்டு கூர்மையாகக் கேட்கிறார்.
- மாணவர் (க) பின்னூட்டலுக்குப் பொருத்தமான வழிகாட்டி வினாக்களுக்கு குறிப்பு வடிவத்தில் விடை அளிக்கிறார். எழுத்துரு தொடர்பாக முன்கூட்டியே ஏற்படுத்தப்பட்ட காரணிகளை அல்லது "உங்கள் ஆக்கத்தில் என்ன பிடித்திருக்கிறது, என்ன அவ்வளவு விருப்பமில்லாதது?", "நான் எதனை அப்படியே வைத்திருப்பேன், எதனை நான் மாற்றுவேன் / திருத்துவேன்? " என்னும் பொது வினாக்களை இவை குறிப்பிடும்.
- மாணவர் (க) தன் குறிப்புகளின் அடிப்படையில் மாணவர் (அ) வுக்கு பின்னூட்டல் வழங்குகிறாள் / வழங்குகிறான்.
- பணிகளை மாற்றி பயிற்சி திரும்பத் திரும்ப செயற்படுத்தப்படுகின்றது.
- மீள்நிலையில் நடைபெறக்கூடிய கலந்துரையாடலில்: பின்னூட்டலில் எது நன்றாக நடந்தது / எது நன்றாக நடக்கவில்லை, நான் பெற்ற பின்னூட்டலில் என்னுடைய பட்டறிவு எப்படியிருந்தது?

---

**மாற்றுவழி:**

- எழுத்துருவுக்கு மாற்றாக, ஓர் ஓவியம், ஓர் எடுத்துரைப்பு அல்லது ஒரு தனிப்பட்ட வெற்றி ஆகியன பற்றியும் பின்னூட்டல் வழங்கலாம்.
- பெரிய குழுக்களிலும் பின்னூட்டல் வழங்கலாம், அது எதிர்வினைகளின் எண்ணிக்கையைக் கூட்டும். அதனுடன் தொடர்ச்சியான பின்னூட்டல் மதிப்பாய்வுக்கும் இடமுண்டு, அதனால் அதன் தரமும் உயரும்.